செய்தி வெளியீடு எண் : 1377 நாள் : 13.07.2023

**45 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் ரூ.1559.25 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள தொழில் 4.0 தொழில்நுட்ப மையங்கள் – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (13.07.2023) தலைமைச் செயலகத்தில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை சார்பில், 45 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் 1559 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள தொழில் 4.0 தொழில்நுட்ப மையங்களை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

மாணவர்கள் தொழிற்பயிற்சி பெறுவதன் மூலம், வேலைக்கேற்ற திறனைப் பெற்று தகுதியான வேலைவாய்ப்பை பெறவும், தங்களது சமூக பொருளாதார நிலையை உயர்த்திக் கொள்ளவும் இயலும் என்பதைக் கருத்தில் கொண்டு, தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் தொழிற்பயிற்சி நிலையங்கள் (Industrial Training Institutes) தமிழ்நாடு அரசின் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையால் நடத்தப்பட்டு வருகின்றன. இதன்மூலம், மாணவர்களின் வேலைவாய்ப்பு பெறும் திறன் அதிகரிக்கும். இத்தகைய தொழில்திறன் பெற்ற மனிதவளத்தை உருவாக்கிட புதிய அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களை தொடங்குதல், அவற்றின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், புதிய தொழிற்பிரிவுகளை தொடங்குதல் போன்ற பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் தற்போது ஃபிட்டர், டர்னர், மெசினிஸ்ட், எலக்ட்ரிசியன், வெல்டர், ஏசி மெக்கானிக் போன்ற 78 தொழிற்பிரிவுகளில் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது. மாறிவரும் தொழில்நுட்பங்களுக்கு ஏற்ப எதிர்கால வேலைவாய்ப்புகளை தமிழ்நாட்டு இளைஞர்கள் பெறவேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் தமிழ்நாடு அரசு 71 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களை ரூ.2877.43 கோடி செலவில் தொழில் 4.0 தரத்திலான திறன் பயிற்சிகளை வழங்கும் வகையில் தொழில்நுட்ப மையங்களாக தரம் உயர்த்த திட்டமிட்டது.

அதன்படி, 71 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் தொழில் 4.0 தரத்திலான தொழில்நுட்ப மையங்கள் உருவாக்கப்பட வேண்டும் என்பதற்காக தமிழ்நாடு அரசு, டாடா டெக்னாலஜிஸ் நிறுவனத்துடன் 14.06.2022 அன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டது. இதன்

முதற்கட்டமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 8.06.2023 அன்று ஓரகடத்திலுள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 22 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் அமைக்கப்பட்டுள்ள தொழில் 4.0 தொழில்நுட்ப மையங்களை திறந்து வைத்தார்.

டாடா டெக்னாலஜிஸ் லிமிடெட் நிறுவனத்தின் தலைமையிலான 20 சர்வதேச நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் 87.5 : 12.5 என்ற விகிதத்தில் டாடா டெக்னாலஜிஸ் நிறுவனமும், தமிழ்நாடு அரசும் முதலீடு செய்து இத்திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இது தமிழ்நாட்டு தொழிற்பயிற்சி நிலையங்களின் வளர்ச்சியில் ஒரு வரலாற்று சிறப்பு மிக்க நிகழ்வாகும்.

இந்த மையங்களில் டாடா டெக்னாலஜிஸ் லிமிடெட்., நிறுவனத்துடன் இணைந்து தொழில் 4.0 தரத்திலான புதிய தொழில்நுட்பங்களுடன் கூடிய இயந்திரங்கள், உபகரணங்கள், கருவிகள் மற்றும் மென்பொருட்கள் நிறுவப்பட்டு ரோபோட்டிக்ஸ், இண்டஸ்ட்டிரியல் ஆட்டோமேஷன், மேனுஃபேக்சரிங் பிராசஸ் கண்ட்ரோல், அட்வான்ஸ்டு மேனுஃபேக்சரிங், மெக்கானிக் மின்சார வாகனங்கள், இண்டர்நெட் ஆப் திங்க்ஸ், அடிட்டிவ் மேனுஃபேக்சரிங், இண்டஸ்ட்டிரியல் பெயிண்டிங், அட்வான்ஸ்டு பிளம்பிங், அட்வான்ஸ்டு ஆட்டோமொபைல் டெக்னாலஜி போன்ற நவீன திறன் பயிற்சிகள் மாணவர்களுக்கும், தொழிற்பயிற்சி நிலைய பயிற்றுநர்களுக்கும் வழங்கப்பட்டு வருகின்றன.

அதன் தொடர்ச்சியாக, இரண்டாம் கட்டமாக செங்கல்பட்டு மாவட்டம் – பெரும்பாக்கம், வேலூர் மாவட்டம் – வேலூர், திருப்பத்தூர் மாவட்டம் – வாணியம்பாடி, கோயம்புத்தூர் மாவட்டம் – கோயம்புத்தூர், திருப்பூர் மாவட்டம் – உடுமலைப்பேட்டை, இராமநாதபுரம் மாவட்டம் – இராமநாதபுரம், பரமக்குடி, முதுகுளத்தூர், கிருஷ்ணகிரி மாவட்டம் – ஓசூர், கன்னியாகுமரி மாவட்டம் – நாகர்கோவில், தூத்துக்குடி மாவட்டம் – திருச்செந்தூர், நாகலாபுரம், வேப்பலோடை, திருநெல்வேலி மாவட்டம் – இராதாபுரம், புதுக்கோட்டை மாவட்டம் – புதுக்கோட்டை, விராலிமலை அரியலூர் மாவட்டம் – அரியலூர், ஆண்டிமடம், கள்ளக்குறிச்சி மாவட்டம் – சங்கராபுரம், உளுந்தூர்பேட்டை, நாகப்பட்டினம் மாவட்டம் – நாகப்பட்டினம், செம்போடை, திருக்குவளை, திருவாரூர் மாவட்டம் – நீடாமங்கலம், கோட்டூர், சென்னை மாவட்டம் – கிண்டி, வடசென்னை, அம்பத்தூர், தென்காசி மாவட்டம் – தென்காசி, கடையநல்லூர், தஞ்சாவூர் மாவட்டம் – தஞ்சாவூர், திருவையாறு, ஒரத்தநாடு,

சிவகங்கை மாவட்டம் – சிவகங்கை, காரைக்குடி, சேலம் மாவட்டம் – மேட்டூர் அணை, கருமந்துறை, திருவண்ணாமலை மாவட்டம் – திருவண்ணாமலை, ஜமுனாமரத்தூர், ஈரோடு மாவட்டம் – கோபிசெட்டிபாளையம், தருமபுரி மாவட்டம் – தருமபுரி, பெரம்பலூர் மாவட்டம் – பெரம்பலூர், ஆலத்தூர், கடலூர் மாவட்டம் – நெய்வேலி, காட்டுமன்னார்கோயில், ஆகிய 45 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் 1559 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப மையங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றைய தினம் காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

இதன் மூலம் அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் ஒவ்வொரு வருடமும் 5,140 மாணவர்கள் கூடுதலாக சேர்க்கப்பட்டு பயனடைவர். அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் ஏற்கனவே வழங்கப்பட்டு வந்த வழக்கொழிந்த பழைய தொழிற்பிரிவுகள் நீக்கப்பட்டு புதிய தொழிற்பிரிவுகள் அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம் கூடுதலாக 4900 தொழிற்பிரிவிற்கான இருக்கைகள் உருவாக்கப்பட்டு, ஒவ்வொரு ஆண்டும் 10,040 மாணவர்கள் இந்த 4.0 தரத்திலான தொழிற்பிரிவுகளில் பயிற்சி பெறுவர். அதுமட்டுமின்றி, பட்டயம் மற்றும் பட்டப்படிப்பு படித்தோரும் குறு, சிறு நடுத்தர தொழிற்சாலைகளில் பணிபுரிவோரும் இங்கு வழங்கப்படக் கூடிய குறுகிய கால பயிற்சிகளில் சேர்ந்து தற்போதைய தொழில் துறைக்கு தேவையான அதிநவீன தொழிற்நுட்பங்களை கற்று பயனடையலாம்.

இந்த நிகழ்ச்சியில் தலைமைச் செயலகத்திலிருந்து, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. கே.ஆர். பெரியகருப்பன், மாண்புமிகு சமூக நலன் – மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி. கீதா ஜீவன், மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. முகமது நசிமுத்தின், இ.ஆ.ப., வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை ஆணையர் திரு. கொ. வீரராகவ ராவ், இ.ஆ.ப., டாடா டெக்னாலஜிஸ் தலைவர் (மனிதவளம் மற்றும் தகவல் தொழில்நுட்பம்) திரு. பவன் பகேரியா, Global Head திரு. சுசில் குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மேலும், காணொலிக் காட்சி வாயிலாக கடலூர் மாவட்டத்திலிருந்து சட்டமன்ற உறுப்பினர் திரு. சபா ராஜேந்திரன், மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் அ. அருண்தம்புராஜ், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்களும், கிருஷ்ணகிரி மாவட்டத்திலிருந்து சட்டமன்ற உறுப்பினர் திரு. ஒய். பிரகாஷ், மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கே.எம். சரயு, இ.ஆ.ப., மேயர் திரு. எஸ்.ஏ. சத்யா மற்றும் அரசு உயர் அலுவலர்களும், இராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர் திரு. கே. நவாஸ்கனி, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. காதர்பாஷா முத்துராமலிங்கம், திரு. செ. முருகேசன், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பா. விஷ்ணு, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்களும், சேலம் மாவட்டத்திலிருந்து சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ். சதாசிவம், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி மேனகா மற்றும் அரசு உயர் அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

............

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in